(3) அத்தகைய ஒவ்வொரு திவிநெகும மாவட்டக் குழுவும் எந்தப் பிரதேச செயலாளரின் அதிகார இடப்பரப்பினுள் தாபிக்கப்படு கின்றதோ அந்தப் பிரதேச செயலாளர், அத்தகைய ஒவ்வொரு திவிநெகும மாவட்டக் குழுவுக்கும் மதியுரைநபரொருவராகப் பணியாற்றுதல் வேண்டும்.

திவிநெகும மாவட்டக் குழுக்களின் குறிக்கோள்கள்.

**20.** ஒரு திவிநெகும மாவட்டக் குழுவின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) திவிநெகும பிராந்திய ஒழுங்கமைப்புகள் மற்றும் திவிநெகும சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு கள் என்பவற்றினூடாக இச்சட்டத்தின் குறித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல்;

(ஆ) அந்தந்த மாவட்டங்களில் திவிநெகும சமுதாய அடிப் படையிலான ஒழுங்கமைப்புகளினதும் திவிநெகும பிராந்திய ஒழுங்கமைப்புகளினதும் நிகழ்ச்சித் திட்டங் களை மேற்பார்வை செய்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுசெய்தல்;

(இ) திவிநெகும பிராந்திய ஒழுங்கமைப்புகளும் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளும் தொடர்பாக வேறு மாவட்ட மட்ட அரசாங்கம்சார் ஒழுங்கமைப்பு களின் ஒத்துழைப்பைப் பெறுதல்; அத்துடன்

(ஈ) அந்தந்த மாவட்டங்களில் பணியாற்றுகின்ற திவிநெகும சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினதும் பிராந்திய ஒழுங்கமைப்புகளினதும் நிகழ்ச்சித்திட்டங் களை ஒருங்கிணைத்தல்.

திவிநெகும மாவட்டக் குழுக்களின் தத்துவங்கள்.

**21.** ஒவ்வொரு மாவட்டக் குழுவினதும் தத்துவங்கள் பின்வரு வனவாதல் வேண்டும்:-

(அ) மூன்றுமாதங்களுக்கொருதடவை குழுக் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் நடாத்துதல்;

